## தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம்

விருதுநகர் மாவட்டம் குழந்தைத் தொழிலாளர் திட்டம் 1986 ஆம்ஆண்டு முதல் மத்திய தொழிலாளர் அமைச்சக நிதி உதவியுடன் மாவட்ட ஆட்சியரை தலைவராக கொண்டு செயல்பட்டு வருகிறது . இத்திட்டத்தின் மூலம் 1988 ஆம் ஆண்டு முதல் மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களுக்கான சிறப்புப்பள்ளிகள் துவங்கப்பட்டு தற்போது சுமார் 774 மாணவர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இச்சிறப்புப்பள்ளிகளில் 9 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் தொழிலில் இருந்து மீட்கப்பட்டுப் பின்னர் சிறப்புப்பள்ளிகளில் அதிக பட்சமாக மூன்று வருடங்கள் பயிற்சியளிக்கப்பட்டு முறைசார் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு வருகின்றனர் . இதுவரை சுமார் 9704 மாணவர்கள் முறைசார் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். தமிழக அரசு இத்திட்டத்திற்கு கூடுதல் கவனம் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

### திட்டத்தின் நோக்கம் :

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஆபத்தான மற்றும் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்களை (9-14 வயது) மீட்டு அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கும் வகையில் சிறப்புப் பள்ளிகளில் சேர்த்து அவர்களின் கல்வியைத் தொடரும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது . 2011-2012 ஆம் ஆண்டு சிறப்புப் பள்ளிகளில் பயின்ற 197 மாணவ , மாணவிகள் முறைசார் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் .

### திட்ட செயல்பாடுகள்:

1. 9 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் சேர்க்கப்படுகின்றனர்.
2. சிறப்புப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகையாக மாதம் ரூ. 100/- வழங்கப்படுகின்றது.
3. மாணவர்களுக்கு இலவச மதிய உணவு, இலவச பாடப்புத்தகங்கள், விளையாட்டு பொருட்கள் மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கப்படுகிறது.
4. மாணவர்களுக்கு தொழிற்கல்வி பயிற்சிகள் ( தையல், கூடைபின்னுதல், உல்லன் நூல் பின்னுதல், பூக்கள் பின்னுதல் போன்ற பயிற்சிகள் வழங்கப்படுகிறது.
5. சிறப்புப்பள்ளி மாணவர்களின் பெற்றோர்களைக் கொண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் சுய உதவிக்குழுக்கள் துவங்கப்பட்டு , வங்கி கடனும் வழங்கப்பட்டு வருகின்றது.
6. சிறப்புப்பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் மாதம் தோறும் மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகின்றது.
7. மாணவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் வருடத்திற்கு ஒரு முறை கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றது.

8. முறைசார் பள்ளியில் சேர்க்கவிருக்கும் மாணவர்களுக்கு உற்சாகமூட்டும் வகையிலும் நம்பிக்கையூட்டும் வகையிலும் வசந்தத்தை நோக்கி நிகழ்ச்சி மற்றும் இணைப்புப்பயிற்சி ( Bridge Course) நடத்தப்படுகிறது.

**கல்வி உபகரணங்கள் :**

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தில் உள்ள சிறப்புப் பள்ளி மாணவர்களுக்கு பாடநூல்கள்,குறிப்பேடுகள்,பேனா,பென்சில்,விளையாட்டுப் பொருட்கள், காலனிகள் மற்றும் சீருடைகள் ஆகியவை மாநில அரசு நிதியிலிருந்து இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது . மேலும் பள்ளிக்கு தேவையான கதைப் புத்தகங்கள், கரும்பலகைகள் , உலக உருண்டைகள் , வரைபடங்கள், புத்தகபைகள் ஆகியவை வழங்கப்படுகிறது .

**தொழிற்பயிற்சி :**

சிறப்புப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதுடன் பயிற்சி பெற்ற தொழிற் கல்வி பயிற்றுநர்களை கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது . இவற்றில் கூடை பின்னுதல்,துணி தைத்தல், பொம்மை தயாரித்தல் மற்றும் கைவினைப் பொருள்கள் ஆகியவை கற்றுத் தரப்படுகிறது . இப்பயிற்சிக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் திட்டத்தின் மூலமாக வழங்கப்படுகிறது .

**மதிய உணவு :**

சிறப்புப் பள்ளி மாணவர்களுக்கு சத்து உணவுத்திட்டத்தின் மூலம் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது .

**ஊக்கத்தொகை :**

சிறப்புப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ஊக்கத் தொகையாக ரூ.100/- அவர்களின் அஞ்சலக வங்கி சேமிப்புக் கணக்குகள் வாயிலாக வழங்கப்படுகிறது .இத்தொகையானது அவர்கள் முறைசார் பள்ளியில் சேர்க்கப்பட்ட பிறகே தொடர்ந்து படிப்பதற்காக வங்கி/ அஞ்சலகத்திலிருந்து எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படும் .

**மகளிர் சுய உதவிக்குழுக்கள் :**

இச்சிறப்புப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு அவர்களுக்கு தொழில் தொடங்க வங்கிகள் மூலம் கடன் வாங்கித் தரப்பட்டுள்ளது . மேலும் தனிநபர் DRI கடன் உதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது .

**விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் :**

ஜீன் - 12 அன்று உலக குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்புத் தினம் அனுசரிக்கப்படுகின்றது . செப்டம்பர் 8 உலக எழுத்தறிவு தினம் சிறப்பு நிகழ்ச்சிகள் மாவட்டம் முழுவதும் நடத்தப்படுகின்றது . நவம்பர் 14 குழந்தைகள் தினம் ஒரு மாதம் முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

1. முக்கிய விழாக்களின் ( தீபாவளி, பொங்கல் ) போது மாவட்ட ஆட்சியர் சிறப்புப் பள்ளி குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் வாழ்த்து அட்டைகள் அனுப்பி மகிழ்விப்பது .

2 தொழிற்சாலைகளில் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது .குழந்தைத் தொழிலாளர் கண்டறியப்பட்டால் உடனடியாக விடுவிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனம் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது .

3 கருத்தரங்குகள் , பேரணிகள், கலைப்பயணங்கள் நடத்தப்படுகின்றது .

4. சிறப்புப் பள்ளியிலிருந்து முறையான பள்ளிக்குச் சென்று படிக்கும் குழந்தைகளில் நல்ல மதிப்பெண் பெறும் மாணவர்களைப் பாராட்டி பரிசு வழங்குதல் . ( இந்த வருடம் 2011-2012 தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகள் நடைபெறும் மாவட்டங்களிலேயே விருதுநகர் மாவட்டத்தில் 10 ஆம் வகுப்பில் செல்வி. இ.ருபலட்சுமி என்ற மாணவி 500க்கு 475 மதிப்பெண் மற்றும் 12ஆம் வகுப்பில் செல்வி எஸ். ஜெஸிந்தா மேரி என்ற மாணவி 1200க்கு 1060 மதிப்பெண் எடுத்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது )

5. ஒவ்வொரு ஊராட்சி,நகராட்சி மற்றும் மாநகராட்சி வார்டுகள், கிராமங்களிலும் குழந்தைத் தொழிலாளர்கள் யாரும் இல்லை என்று அறிவிக்கும் ஒவ்வொரு பஞ்சாயத்துத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் ஆகியோருக்கு சான்றிதழ்கள் மற்றும் கேடயம் வழங்கப்பட்டுள்ளது.

6. 2007-2008 ஆம் ஆண்டிற்காக பேரூராட்சிகள் - சா.கொடிக்குளம் காரியாபட்டி, மல்லாங்கிணறு மற்றும் ஊராட்சிகள் என்.மேட்டுப்பட்டி, பி.குமாரலிங்கபுரம், கிருஷ்ணாபுரம், மங்கலம், சொக்கம்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் கேடயம் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது .

7. 2008-2009 ஆம் ஆண்டிற்காக முத்துலாபுரம், ஒ. கோவில்பட்டி, மேல சின்னையாபுரம், சுப்பிரமணியபுரம், ஒத்தையால் ஆகிய ஊராட்சிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் கேடயம் வழங்கப்பட்டுள்ளது.

**சாதனைகள்**

1. முறைசார் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ள சிறப்புப்பள்ளி மாணவர்களில் பலர் முதல் தரத்தில் பயின்று வருகின்றனர்.
2. தொழிற்பயிற்சி பெற்றுள்ள மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு சந்தை (JOB MELA) நடத்தப்பட்டு பலர் நல்ல நிறுவனத்தில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் பலர் சுய தொழில் தொடங்கி உள்ளனர்.
3. சுய உதவிக்குழு உறுப்பினர்களில் பலர் சுய தொழில் செய்து தங்கள் குடும்ப வருமானத்தை உயர்த்தியுள்ளனர்.
4. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சுய உதவிக்குழுக்களில் பல தாட்கோ உள்ளிட்ட அரசு நலத்திட்ட உதவிகளைப் பெற்றுள்ளனர்.
5. சிறப்புப்பள்ளி மாணவர்கள் இளம் விஞ்ஞானிகளாகத் தேர்வு பெற்றுள்ளனர்.

6. பள்ளி மாணவர்களுக்கு தரமான கல்வி, மதிய உணவு, சீருடை, பேருந்து சலுகை உள்ளிட்ட பல சலுகைகள் வழங்கப்படுகின்றன.
7. சிறப்புப்பள்ளியில் பயின்று 10 மற்றும் 12ம் வகுப்பில் வகுப்பு தேர்ச்சிப்பெற்று பட்டப்படிப்பு பயிலும் மாணவ,மாணவியர்களுக்கு மாதம் ரூ250/- வீதம் உதவித்தொகை வழங்கப்படுகிறது.
8. இந்த ஆண்டு 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 1060/1200 மதிப்பெண் எடுத்து மாணவி செல்வி எஸ்.ஜெஸிந்தாமேரி சாதனை படைத்துள்ளார்.
9. 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 475/500 மதிப்பெண் எடுத்து மாணவி செல்வி இ.ரூபலட்சுமி சாதித்துள்ளார்.
10. ஆசிரியர்களுக்கு கற்றலின் இனிமை, தொழிற்கல்வி, செயல்வழிக்கற்றல் உபகரணங்கள், சிறார் நாடகக் கலைப்பயிற்சி, ஆங்கிலம், அறிவியல், கணக்கு என பல பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.
11. குழந்தைத் தொழிலாளர்களின் பெற்றோர்கள் சுமார் 748 பேர் பங்கேற்க 48 சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
12. சுழற்சி நிதியாக திட்டத்திலிருந்து ரூ. 10 இலட்சமும், தாட்கோ மூலம் ரூ. 75 ஆயிரமும், வங்கி கடனாக ரூ. 30 இலட்சத்திற்கும் மேல் பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.
13. குழந்தைத் தொழிலாளர்களின் தாய்மார்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.
14. தொழிற்பயிற்சி 14 முதல் 17 வயதுள்ள மாணவர்கள் சுமார் 1000 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. 500 பேருக்கு மேல் வேலை வாய்ப்பு பெற்று அவர்களது வாழ்க்கைத் தரம் உயர முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
15. நிலாப்பள்ளி, சாதித்துக்காட்டுவோம் உள்ளிட்ட ஏராளமான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.
16. கையெழுத்து இயக்கம், ஸ்டிக்கர் ஒட்டும் இயக்கம் என பல புதுமையான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.
17. குழந்தைத் தொழிலாளர்களைக் கண்டறிய சிறப்பு படைகள் அமைக்கப்பட்டு தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
18. குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுதலில் சிறப்பாக பணியாற்றிய உள்ளாட்சி அமைப்புகளுக்கான கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.